## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா என்பதும்,

- நிதியத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிதியத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 57 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதன விடயமொன்றின் மொத்தக் கிரயத்தை ஒப்பீடு செய்யும் போது | நிலாவெளி பயிற்சி நிலைய கட்டிடம் மற்றும் காணி என்பன தனித்தனியாக தற்போது மதிப்பீடு செய்யப்படாமையினால் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| கவனத்தில் கொள்ளக்கூடிய கிரயத்தினை உள்ளடக்கிய அந்த விடயத்தின் பகுதி ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக இனங்காணப்படல் வேண்டும். எனினும் மொத்தக் கிரயம் ரூபா 126,255,800 ஆன நிலாவெளி பயிற்சி நிலைய கட்டிடத்துடன் 7 ஏக்கர் 37 பேர்ச் காணி, காணி மற்றும் கட்டிடமாக தனித்தனியாக இனங்காணப்படாமையின் காரணமாக கட்டிடத்தின் பெறுமானத் தேய்வு கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அதனை எதிர்காலத்தில் தனித்தனியாக மதிப்பீடு செய்து பெறுமானத் தேய்வை கணிப்பிட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 6 இலட்சம் புதிய குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கும் போது சமுர்த்தி உரித்து சான்றிதழை அச்சிடுதல் மற்றும் விழாச் செலவினங்களுக்காக 2019 ஆம் ஆண்டின் போது நிதியத்திலிருந்து செலவிடப்பட்ட ரூபா 113,074,862 தொகை வங்கி நிதிப் பிரிவிலிருந்து மீளளிப்பு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அது கிடைக்க வேண்டிய பணமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் 06 இலட்சம் புதிய குடும்பங்களுக்கு சமுர்த்தி நிதியுதவி உரித்தை வழங்குவதற்காக செலவிடப்பட்ட செலவினம் வங்கிப் பிரிவிலிருந்து மீளளிப்பு செய்வதற்காக நம்பிக்கைப் பொறுப்பு சபையின் ஆலோசனையின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற மேலதிகமாகக் கிடைத்த காப்புறுதி தவணைப் பணம் மற்றும் பொது வைப்புக் கணக்கில் காணப்பட்ட முறையே ரூபா 968,265 மற்றும் ரூபா 38,050 ஆன செலவு மீதி என்பவற்றை கண்டறிவதற்கு தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கின் மூலம் மேலதிகமாகக் கிடைத்த காப்புறுதி தவணைப் பணம் ரூபா 968,262 தொகையை திரண்ட நிதியத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே பொது வைப்புக் கணக்கில் ரூபா 38,050 செலவு மீதி 2022 இன் இறுதிக் கணக்கின் மூலம் திரண்ட நிதியத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மீதியை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 8,166 நலனாளிகளுக்காக சுகாதார வசதிகளுக்காக (மலசலகூடங்களை நிர்மாணித்தல்) ஒருவருக்கு ரூபா 15,000 வீதம் இரண்டாவது தவணையாக ரூபா 122,490,000 செலுத்த வேண்டியிருந்த போதிலும் | சுகாதார செயற்திட்டமொன்று ஒரு வருடத்திற்குள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்படாமையினால் இரண்டாவது தவணையாக செலுத்துவதற்கு காணப்பட்ட | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அந்த பணம் அட்டுறு செலவினமாக கணக்கீடு செய்யப்படாதிருந்த போதும் செயற்பாட்டு இலாபம் அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன் நடைமுறைப் பொறுப்புக்களும் அந்த அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மிகுதிப் பணம் 2020 ஆம் ஆண்டில் அட்டுறு செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | |
| (ஈ) | அமைச்சிலிருந்து கிடைத்த 02 மின் உற்பத்தி உபகரணங்கள் நிலாவெளி பயிற்சி நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அது நன்கொடையாக கணிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | அமைச்சிலிருந்து கிடைத்த மின் உற்பத்தி இயந்திரங்கள் நிலாவெளி பயிற்சி நிலையத்திற்கு வழங்கி அதன் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை பூர்ததிசெய்து பயனபாட்டிற்கு எடுப்பதற்காக தயார் நிலையில் காணப்படுவதுடன் எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு டவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | ரூபா 11,031,770 கூட்டுத்தொகையான 03 கணக்கு விடயங்களுக்குரிய பட்டோலை மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2014 ஆம் ஆண்டின் இறுதிவரை சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மோட்டார் சைக்கிள் கடன் நிதியத்திலிருந்து சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு செலவு வைகக்கப்பட்ட ரூபா 8,664,920 தொகை 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கின் மூலம் திரண்ட நிதியத்தில் செலவு வைத்து காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வகைப்படுத்தப்படாத அலுவலக உபகரணங்களின் ஆரம்ப மீதியில் எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உரிய பட்டோலை மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | பொருள் மெய்மையாய்வு நடவடிக்கை மேற்கொண்டு சொத்துக்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை | சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியத்தின் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கை இதுவரை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் | சுற்றறிக்கை மற்றும் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| எடுத்திருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுற்றறிக்கையின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் எதிர்காலத்தின் போது மேற்கொள்வதற்கு தேவையான செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சுமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 641,568,935 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,450,588,357 ஆக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 2,092,157,292 வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டின் செயற்பாட்டு செலவினம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கை உறுதியின் 6(9) ஆம் பந்தியின் பிரகாரம் சபையின் எந்தவொரு அங்கத்தவரினாலும் மேற்கொள்ளப்பட்ட தர்ம உதவிகளுக்காக சம்பளம், படிகள் அல்லது மிகையூதியப்படி ஒன்று உரித்தில்லாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருக்கும் போது சமுர்த்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உத்தியோகபூர்வ அதிகாரத்தில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தலைவராக செயற்பட்டமைக்காக மீளாய்வாண்டில் பதிற்கடமை சம்பளமாக ரூபா 242,000 செலுத்தப்பட்டிருந்தது. | சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரி பிரிவின் பதில் பணிப்பாளர் சமூக பாதுகாப்பு நிதியத்திலும் கடமையாற்றியிருந்ததுடன் அது பணிப்பாளர் நாயகம் மற்றும் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கை உறுதியின் 6(9) ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சமுர்த்தி நலனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக 39,478 சுகாதார மலசலகூடங்களை நிர்மாணிப்பதற்காக | 2021 ஆம் ஆண்டின் முதல் சில மாதங்களில் இந்த நிர்மாணங்கள் யாவும் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. | குறித்துரைத்த காலத்தில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்து நிதிஏற்பாடுகளில் |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 930,840,000 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 இல் 35,111 மலசலகூடங்களுக்காக நிதி வழங்கப்பட்டிருந்த போதிலும் வேலை பூர்த்திசெய்யப்பட்ட மலசலகூடங்களின் எண்ணிக்கை 21,091 அதாவது 60 சதவீதம் ஆகும். முன்னோடி செயற்திட்டமாக இரத்தினபுரி மாவட்டத்தை தெரிவு செய்து 11,137 மலசலகூடங்களை நிர்மாணிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 1,613 மலசலகூடங்கள் அதாவது 15 சதவீதம் மாத்திரம் வேலை பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. பயனாளி முகாமைத்துவ மொடியூல் (CRM) இனை பிரகாரம் பரீட்சிக்கும் போது நலன்கள் பெற்ற 13 பேர் சமுர்த்தி நலனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இரத்தினபுரி மாவட்டத்தில் நிர்மாணிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த 11,137 சுகாதார மலசலகூடங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டின் முதல் சில மாதங்களில் பூர்த்திசெய்யப்படடிருந்தது. நலன்கள் பெற்ற 13 பேர் சமுர்த்தி நலனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களாக இல்லாமை தொடர்பான விடயங்களை கண்டறிந்து தேவையான மிகுதி நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய பிரிவிற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இருந்து உச்ச நலனைப் பெறுதல் வேண்டும். குறைந்த வருமானம் பெறுபவர்களையும், சமுர்த்தி நலனாளிகளையும் உறுதிப்படுத்தி நலன்கள் வழங்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2) இன் பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் செயலாற்றல் அறிக்கையுடன் பொதுத் திறைசேரியின் அரச நிதித் திணைக்களத்திற்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 02 வருட தாமதத்தின் பின்னர் 2022 திசெம்பர் 16 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் இறுதிக் கணக்குகள் 2022 மார்ச் 09 ஆந் திகதி அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் உரிய காலத்தில் கணக்குகளை சமர்ப்பித்தல் வேண்டும். |

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 877(1) இன் பிரகாரம் நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பாக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் சமூக அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் பாதீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் உரிய காலத்தில் பாதீடு தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். |